**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 1034/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **ரஞ்சித்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | கிருஷ்ணமூர்த்தி | **Calling** | : | **கூலி வேலை** |
| **Village** | : | **பட்டிவீரன்பட்டி** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **30** |
| | | | **Dated** | : | **24.11.2025.** |

**24.11.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 திரு. **ரஞ்சித்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் **பட்டிவீரன்பட்டியில்** குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த அருள்ராஜை தெரியும். அசா.1 முனீஸ்வரியை தெரியும். கடந்த 15.01.2025 ம் தேதி நானும் வெங்கடேஸ் என்பவரும் மதியம் சுமார் 3.00 மணிக்கு ஆரியநல்லூர் பஸ் ஸ்டாப்பில் சொந்த வேலையாக பேசிக்கொண்டு இருந்தோம். அப்போழுது திண்டுக்கல்லில் இருந்து செம்பட்டி நோக்கி Platina இருசக்கர வாகனத்தில் ஒருவர் வந்துக்கொண்டிருந்தார். அப்போது ஆரியநல்லூர் பிரிவில் ஊருக்குள் இருந்து மெயின் ரோடை நோக்கி ரெனால்ட் கார்

Control பண்ணமுடியாத வேகத்தில் வந்து இருசக்கர வாகனத்தில் வந்தவர் மீது மோதிவிட்டது. நானும் வெங்கடேசும் அவரை தூக்கி பார்த்தோம். அப்போது தான் அவர் அருள்ராஜ் என்பது தெரிந்தது. அவருக்கு தலையில் காயம் பட்டிருந்தது. காது மூக்கில் இரத்தம் வந்தது. அருள்ராஜ் சுயநினைவு இன்றி இருந்தார். ரெனால்ட் காரை ஓட்டியவரை பார்த்தால் எனக்கு அடையாளம் காட்ட தெரியும், அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. அவர் தனது பெயர் சங்கர நாராயணன் என்றும் மதுரை ஜெய்கிந்த் புரத்தை சேர்ந்தவர் என்றும் சொன்னார். உடனே 108 ஆம்ப்லன்ஸிற்கு போன் செய்தோம். இந்த தகவலை அருள்ராஜ் மனைவி முனீஸ்வரிக்கு போன் மூலமாக தெரிவித்தேன். காயம் பட்ட அருள்ராஜை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்ப்லன்ஸ்ல் கொண்டு சென்றோம். முனீஸ்வரி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார். நான் நடந்த சம்பவத்தை அவரிடம் சொன்னேன். பின்னர் அவரை மேல்சிகிச்சைக்காக JCB மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். அதன் பின்னர் 21ம் தேதி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து அருள்ராஜ் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை**

எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ

Digitally signed by PACKIARAJ
Date: 2025.11.24 12:58:20 +0530

Judicial Magistrate No.I

Dindigul.